PUBLIC LIBRARY
JAFFNA

The Morning Star
CACM Central Office
"Asia House"
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

உதய தாரகை
The Morning Star
A Christian Publication Established 1841
Vol. 173 - Jaffna - January - February 2013 . No.7
*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.*

Subscription Rs.20/=
(postage Include)
Please send your News & Articles
to
The Editor
The Morning Star,
"Asia House"
Maruthanarmadam, Chunnakam.
Email:
thecacmmorningstar@gmail.com

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு விரைந்து சென்ற நிவாரணப் பணிக் குழு





வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கின் சில பகுதிகளுக்கு நிவாரணப் பணிக்குழு விரைந்து சென்று உலர் உணவுப் பொருட்களைப் பகிர்ந்தளித்தது. மேற்படி பாதிப்புக் குள்ளான வெள்ளாவெளி, வாழைச்சேனை மற்றும் ஆனைகட்டியவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் இந்த நிவாரணங்களைப் பெற்றுக் கொண்டனர். திருச்சபைத் தலைவர் வண.ஈனோக் பூ.புனிதராஜா, செயலாளர் வண.பி.தேவதாஸ், அப்பகுதிகளுக்கு பொறுப்பான குருவானவர்கள் வண.ராஜன் றொகான், வண.எஸ்.ஐ. ஆனந்தராஜன் ஆகியோரும், திட்ட முகாமையாளர் கலாநிதி.தர்ஷன் அம்பலவாணர், கிழக்குப் பிராந்தியத் தலைவர் வண.பி.ஆர். நவேந்திர அனுகூலன் ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டுப் பிரமுகர்களான முன்னால் மிஷனரி திரு.பென் பவிங்க் அவர்களின் பேர்த்தி செல்வி எல்சி பவிக், SAOK,UK நிறுவனத்தின் பிரதிநிதிகளான பீட்டர் டன்பி, திரு.எடவேர்ட் பார்ஸ்லி ஆகியோர் இந்த நிவாரணப் பணிகளில் பங்கெடுத்தனர்.

## Indiana Kentucky-UCC குழுவினரின் வன்னி விஜயம்

5ம் திகதி மாலை யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி பயணத்தை ஆரம்பித்த குழுவினர் பூநகரி ஊடாக பயணம் செய்து மாலை 6 மணிக்கு ஜெயபுரம் திருச்சபையினை பார்வையிட்டனர். அங்கிருந்து 6.30 மணிக்கு புறப்பட்டு வெள்ளமும் பள்ளமும் நிறைந்த 45km வீதியில் பயணம் செய்து இரவு 9.30 க்கு கிளிநொச்சி நகரை அடைந்தனர். 6ம் திகதி காலை முறிகண்டி திருச்சபைக்கு சென்ற இவர்களுக்கு திருச்சபை மக்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். அதன் பின்னர் தற்காலிக கொட்டகையில் நடைபெறுகின்ற கிளிநொச்சி சபையினையும் பார்வையிட்டு முரசுமோட்டை சென்ற இவர்களை முன்பள்ளி சிறார்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து சுதந்திரபுரம் திருச்சபை நோக்கி செல்லும் வழியில் விசுவமடு திருச்சபை மக்களுடன் கலந்துரையாடினர். சுதந்திரபுரம் திருச்சபை மக்களால் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதோடு பிள்ளைகளினால் கலை நிகழ்வும் நிகழ்த்தப்பட்டன. அத்துடன் திருச்சபை மக்களுடன் சேர்ந்து அவர்களின் கடந்த கால அனுபவங்களை கேட்டதுடன் அவர்களுக்கு ஆறுதல் கூறி செபித்தனர். தங்கள் செபத்தை ஏறெடுத்த போது "பிதாவே இவர்கள் பக்கமாக எமது மனத்தை திருப்பியதற்காக உமக்கு நன்றி" என்று தங்கள் உணர்வை வெளிப்படுத்தினர். மதிய உணவை முடித்துக்கொண்டு முல்லைத்தீவு நோக்கி செல்லும் வழியில் போரின் கொடுமையான அழிவுகளை கண்டு மனம் நொந்தவர்களாய் மௌனித்தனர். CACM திருச்சபையால் நீராவிப் பிட்டியில் தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகத்தின் மத்தியில் நடத்தப்படுகின்ற மாலை நேர வகுப்பு கல்வி பயிலும் மாணவர்களையும், ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் சந்தித்து கலந்துரையாடினர். அன்று மாலை 7மணியளவில் தூய பேதுரு பெண்கள் இல்லத்தில் வன்னிப் பிராந்தியம் சார்பாக வரவேற்பும் இராவுணவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக்குழுவினர் வன்னிப்பிராந்தியத்தின் பணிகள், திருச்சபையின் தற்போதைய நிலை, திருச்சபை மக்களின் விசுவாச நிலைப்பாடு போன்றவற்றினை கேட்டறிந்து கொண்டனர். அத்துடன் வன்னித்திருச்சபை மக்களின் நிலை, தமிழ் மக்களின் கடந்த கால இடப்பெயர்வு அனுபவங்களினால் பெரிதும் உள்ளம் உடைந்தவர்களாய் அங்கு கூடியிருந்தவர்களின் மத்தியில் கண்ணீர் விட்டழுதனர். தாம் இங்கு வரும் போது உங்களை பற்றி இருந்த எண்ணங்களுக்கும் இப்போதும் தாம் காண்பவற்றிக்கும் அநேக வேறுபாடு உண்டு என கூறினார்கள். 7ம் திகதி காலை பூவரசங்குளம் திருச்சபைக்கு சென்று அதனை பார்வையிட்டு பின்னர் வவுனியா ஆலய வளாகத்தையும் பார்வையிட்டனர். "உங்களின் அனுபவங்கள் எங்களை அதிகமாக பாதித்துள்ளது" எனக்கூறி வன்னியை விட்டு புறப்பட்டனர்.

## முன்பள்ளி ஆசிரியர்களின் ஆங்கில டிப்ளோமாவின் முதல் அணியினர் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறினர்.



CACM திருச்சபையினால் முன்னெடுக்கப்படும் சிறுவர்களுக்கான பணியில் ஒரு அங்கமாகிய சிறுவர் முன்பள்ளிகளை தரமுயர்த்தும் நடவடிக்கை மூலம் ஆசிரியர்களுக்கான ஆங்கிலம் பேசும் டிப்ளோமா பயிற்சி நெறி யாழ். திருநெல்வேலியில் வசிக்கும் புகழ்பெற்ற ஆசிரியர் திரு.G.நிலாந்தன் அவர்களினால் நடாத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் தங்கள் 6 மாதகால பயிற்சியை முடித்துக் கொண்டு முதல் அணியினர் வெளியேறிச் சென்று தங்கள் பணிக்களங்களில் பணியாற்றி வருகின்றனர். இவ் அணியினர் மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம், அவிசாவல முன்பள்ளிகளில் இருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களை வழியனுப்பி வைக்கும் வைபவத்தில் CACM திட்ட முகாமையாளர் கலாநிதி. தர்ஷன் அம்பலவாணர், யாழ். பிராந்திய திட்ட இணைப்பாளர் திரு.T.ஜெயசுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிறுவர்களுக்கான சிறப்பு நற்செய்தி முகாம்

கொழும்புத் திருச்சபையின் ஞாயிறு பாடசாலை ஆசிரியர் குழாமும் உடபுசல்லாவ கமெஸ்ட் புனித அந்திரேயா திருச்சபை சமூகமும் இணைந்து 2013 பெப்பிரவரி 02 - 03 ஆம் திகதிகளில் சிறுவர்களுக்கான சிறப்பு நற்செய்தி முகாம் ஒன்றை நடாத்தினர். 2ம் திகதி சிறுவுர்களுக்கான சிறப்பு பாசறை முழு நாள் நிகழ்வாக நடாத்தப்பட்டது. 40 மாணவர்கள் எமமுடன் இணைந்து கொண்டார்கள்.

3ம் திகதி ஞாயிறு வழிபாட்டுடன் இணைந்து நற்செய்திக் கூட்டமும் நடைபெற்றது. இவ் நற்செய்தி கூட்டத்தின் வழியாக அனேகர் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர்.

கிறிஸ்தவ கல்விக் கற்கை நெறியை வகுப்புகளில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கமைவாக நடாத்தப்பட்ட இரண்டாவது நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரகை ஒளி வீச்சு

## சிலுவைப் பாதை

கிறிஸ்துவுக்குள் அன்பான உறவுகளே!

இக்காலம் லெந்து காலம் ஆகும். இந்நாட்களில் சிலுவைப் பாதையை எம் மனக்கண் முன் கொண்டு வருகின்ற புனித பயணத்திற்கான பாதைகளை செவ்வைபண்ணும் புனித காலம். எம் உடல் உள்ளம் ஆன்மா என்பன புனிதமாக்கப்பட்டு புதிய படைப்புக்களாக மன மாற்றத்தின் மக்களாக வாழ அழைக்கும் காலம் இது.

நாம் இந்த புனிதமான உன்னதமான வழ்வை வாழும்படியாக இயேசு தெரிந்து கொண்ட பாதை சிலுவைப் பாதை. பலர் பல பாதைகளை தெரிந்து கொள்கின்றார்கள். சிலருடைய பாதைகள் சுயமானவைகள். சிலரோ அடுத்தவர்களின் பாதையில் அடி சறுக்காமல் நடை போடுகிறார்கள். வேறு சிலருக்கோ பாதைகளும் பயணங்களும் பிறரால் திணிக்கப்படுகின்றது. ஆனால் இயேசுவோ தனக்கென ஒரு தனிப்பாதையை வகுத்துக் கொண்டார். கடவுளாக இருந்தவர் மனிதனாக பூமிக்கு இறங்கி வந்தது வரலாற்றில் புதுமையான புரட்சிப்பாதை. உளுத்துப்போன உலகத்தில் உயிரோட்டம் ஏற்படுத்த தன் உயிரை விலையாகத் தந்திட முன்வந்த இயேசு தேர்ந்து கொண்ட பாதை சிலுவைப் பாதை.

"என் வழி சிலுவை வழி" என சிலுவைப்பாதையை தெரிந்தெடுக்கிறார் இயேசு. அதனை நிறைவேற்றியும் முடித்தார். முன்பு குற்றவாளிகளின் தோள்களில் சுமத்தப்பட்ட சிலுவை பாரமானது, பாவமானதும் கூட. கொலைகாரர்கள், கொள்ளையர்கள், சமூக விரோதிகள், மக்களின் வாழ்க்கையை சிதைப்பவர்கள் என்று பட்டியலாய் விரிகிற குற்றவாளிகள் சுமந்து சுமந்தே நாறிப்போன சிலுவையை சுத்தம் செய்ய இயேசுவின் சிலுவைப்பாதை வழி திறந்தது.

"எந்நாளும் நான் உங்களோடே இருப்பேன்" என்று உறுதி தந்த இயேசு இன்னமும் எமது மத்தியில் தான் வாழ்கின்றார். சிலுவைப் பாதை இற்றைக்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்து முடிந்த இறந்த கால வரலாறு என யாரும் நினைக்கக் கூடாது. இது நிகழ்கால நிகழ்வுகளின் நிஜங்கள். இது ஒரு கதையல்ல. நிஜம் உண்மைக்கும் நீதிக்கும் உயிர் கொடுத்த உண்மை நிகழ்வு.

இன்று நீதிக்காக, உண்மைக்காக வீதிகள் தோறும் சிலுவைகளோடு போகிற இயேசுவைப் பார்க்க நாம் அனைவரும் அழைக்கப்படுகின்றோம். மனிதர்களின் கண்ணீரிலும், செந்நீரிலும் கலந்திருக்கும் இயேசுவைப் பார்க்க அழைக்கப்படுகின்றோம். வறியவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் பாதை தொடர்கிறது. நிலமிழந்து, உரிமையிழந்து, உறவிழந்து உரிமைக்காக குரல் எழுப்ப முடியாமல் நாளாந்தம் செத்துக் கொண்டிருக்கும் மானிட வாழ்வில் சிலுவைப் பாதை தொடர்கிறது. இங்கே மனிதம் மறுக்கப்படுகின்றது. மனித உரிமை மீறப்படுகின்றது. இயேசுவின் பாதையில் எத்தனையோ மனிதர்கள். மனிதப் போலிகள், வெளிவேடக்காரராகிய பரிசேயர், அதிகார நாற்காலிக்காக உண்மையைக் கைகழுவிய பிலாத்து, கூலிக்காக கொலை செய்ய வந்த போர் வீரர்கள், உதவ வந்த சீமோன், அபலைகளாக அழுகின்ற பெண்கள், வேடிக்கைப் பார்க்க வந்த மனிதக்கூட்டம் இவர்கள் நடுவில் நானும் நீங்களும் எங்கே நிற்கின்றோம்?

எம் அருகில், எம் வீட்டு முற்றத்தில், நான் வழிபாடு செய்யும் வழிபாட்டிடத்தில், வீதியோரத்தில், வைத்திய சாலையில், தடுப்பு முகாமில், சிறைச்சாலைகளில் சிலுவைப் பயணம் செய்யும் எம்மவர்களோடு நாமும் இணைவோம். இவர்களை சமூகத்தின் சுமைகள் என ஒதுக்காமல் எம் வழிகளையும் இதய வாசல்களையும் அகலமாக்குவோம். வாழ்வைத் தேடும் மனிதர்களே! வாருங்கள் இயேசுவின் வழியில் பயணம் செய்வோம்.

DSM

பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

இம்மாதம் பிறந்த நாட்களைக் கொண்டாடும்
அனைத்து உறவுகளுக்கும்
உதய தாரகை
தன் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றது.

## கர்த்தருக்குள் நித்திரை

மண்ணில்
1945
02
20



விண்ணில்
2013
02
11

### திரு.லாசரஸ் யோகானந்தம் வன்னமணி

[இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் (A.O) போதனா வைத்தியசாலை - மட்டக்களப்பு]

இவர் திருமதி பிறிசில்லா நேசமலர் அவர்களின் பாசமிகு கணவரும், அருட்திரு. நிவில் ரூபராஜ் அவர்களினதும், காலஞ்சென்றவர்களான நோபிள், நோயல் ஆகியோரின் தந்தையும் திருமதி லதா நிவில் ரூபராஜ் அவர்களின் மாமனாரும், அன்று நிலுக்ஷன், நிதீஸ் டிலக்ஷன், ஜோய் அபிஷாசன் ஆகியோரின் அப்பப்பாவும் காலஞ்சென்றவர்களான வன்னமணி, தங்கம்மா என்போரின் அன்பு மகனும் திரு. திருமதி புளோரன்ஸ் அரசரெட்ணம் அவர்களின் மருமகனுமாவார். இவரது நல்லடக்க ஆராதனை 12-02-2013 அன்று பி.ப 2:00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று மாலை 4:00 மணிக்கு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

இவரது குடும்பத்தினருக்கு உதயதாரகை ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## இயேசு நேசிக்கிறார் நிலையம் - தெல்லிப்பளை - உரும்பிராய்



1990ம் வருடம் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து குடா நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் குடியேறினர். இந்த சூழலில் உரும்பிராயில் தற்காலிக வதிவிடங்களில் வசிக்கும், தெல்லிப்பளைத் திருச்சபைக் குடும்பங்களின் ஆன்மீக வளர்ச்சியையும், இங்குள்ள பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியையும், ஒழுக்கத்தையும் நோக்கமாக கொண்டு தெல்லிப்பளையில் நடைபெற்ற இயேசு நேசிக்கின்றார் பணியானது உரும்பிராய் பிரதேசத்துக்கு விஸ்தரிக்கப்பட்டது. இப்பணியினால் இப்பிரதேசத்தில் உள்ள எமது திருச்சபை குடும்பங்கள் மாத்திரமின்றி சகோதர சமய மக்களும் இந்நிலையத்தின் பணிகளுக்குள் இணைந்து கொண்டனர்.

வண.பிரேமராஜா போதகர் அவர்களால் தெல்லிப்பளையின் வீமன்காமம் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட இயேசு நேசிக்கின்றார் நற்செய்திப் பணியானது, இடம் பெயர்ந்த காலத்தில் அமரர் செல்வரத்னம் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. அவரது தூர தரிசனத்தின் மூலம் உரும்பிராயில் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் இன்று வளர்ச்சியடைந்து இந்த வருடமும், சிறப்பாக நடைபெற்றுள்ளது. இவ்வருடம் இந்நிலையத்தை மையமாக வைத்து ஞாயிறு வழிபாடு ஆரம்பிக்கப் பட்டுள்ளமையானது, இப் பணிகளுக்கு இன்னும் உறுதியையும் உற்சாகத்தையும் தருகின்றது.

2012ம் வருடத்தில் உரும்பிராயில் உள்ள ஒவ்வொரு திருச்சபை குடும்பங்களின் இல்லங்களிலும் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.00 மணிக்கு செபக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் இந் நிலையத்தை மையமாகக் கொண்டு ஓய்வு நாட் பாடசாலை வகுப்புக்களும் ஒவ்வொரு ஞாயிறும் மாலை 4.00 மணிக்கு நடாத்தப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 40 வரையான பிள்ளைகள் கிரமமாக ஓய்வு நாட் பாடசாலை வகுப்புக்களில் பங்குபற்றியுள்ளனர்.

எமது திருச்சபையின் குருத்தோலை ஞாயிறு வழிபாடு, உயிர்த்தெழுந்த திருநாள் வழிபாடு, ஆகிய வற்றை இந்நிலையப் பிள்ளைகளே நடாத்தி சிறப்பித்தனர். அத்துடன் பிள்ளைகள் ஞாயிறு வழிபாட்டையும் இந் நிலைய பிள்ளைகளே நடாத்தினர்.



1-9-2012 இல் எமது திருச்சபையில் நடைபெற்ற பிள்ளைகள் விழாவில் இந்நிலைய பிள்ளைகள் சிறப்புப் நடனம் ஒன்றை வழங்கினர். மேலும் பிள்ளைகள் விழாவில் 15 வரையான பிள்ளைகள் மனன வசனப் போட்டியில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்றுக்கொண்டனர்.

வருடாவருடம் எமது திருச் சபையால் நடாத்தப்பட்டு வந்த தெல்லிப்பளை வைத்தியாலை ஒளிவ்ழா நிகழவானது, இவ்வருடம் 17-12-12 அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது. இணுவில் மற்றும் ஆச்சிரமமும் இணைந்து நடாத்திய இந்நிகழ்வில் பாடல்கள், நடனங்கள், நாடகங்கள் என்பன அழகுற அரங்கேற்றப்பட்டு எல்லாரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டது. அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையின் தலைவர் வண. ஈனோக் புனிதராஜா போதகர் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். வைத்தியசாலையின் உளவளத் துணைப்பிரிவில் இருந்த அனைவருக்கும் திருச்சபைக் குடும்பங்களால் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

27.12.2012 இல் இயேசு நேசிக்கின்றார் நிலையத்தின் ஒளி விழா நிகழ்வு மிகவும் விமரிசையாக நடைபெற்றது. பாடல்கள், நடனங்கள், நாடகங்கள் என பிள்ளைகள் தங்கள் கலைத் திறமைகளை சிறப்புடன் வெளிப்படுத்தினர். இந்நிலையத்தில் பயனடையும் 40 பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இப் பரிசில்களை தெல்லிப்பளை திருச்சபை உறுப்பினர்களும் கொழும்பில் வசிப்பவர்களுமாகிய திருமதி.ஞானதீபம் இராசகாந்தன் குடும்பத்தினரும், செல்வி.ஜனீரா சின்னையா, செல்வி. எஸ்.சீவரட்ணம் ஆகியோர் வழங்கி இப்பணிக்கு உரமூட்டி வருகின்றனர்.

தகவல்:
இணைப்பாளர்,
இயேசு நேசிக்கின்றார் பணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறை குடம் வைக்க விரும்பும் கிறிஸ்தவர்களுக்கு!

கிறிஸ்தவர்களாகிய நாம் இந்து மத சூழலில் வாழ்ந்து வருகின்றோம். எமது மூதாதையர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவ முன் இந்து மதப் பாரம்பரியத்தவராகவே இருந்தனர். எனவே அவர்கள் நடப்பித்த சடங்காச்சாரங்களை நாமும் நடப்பிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்த சடங்காச்சாரங்களை மதம் சார்ந்ததாகவும் மத சார்பற்றதாகவும் காணலாம். அத்துடன் தமிழர்களின் கலாச்சார பண்பாட்டுச் சின்னமாகவும் இச் சடங்குகள் பொதுமைப்படுத்தப் படுகின்றது. இந்த நிலையில் கிறிஸ்தவர்கள் இச்சடங்காச் சாரங்களை எப்படி நடப்பிக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது. இந்தச் சடங்குகளுக்கான அர்த்தத்தை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சடங்காச் சாரங்களில் நிறை குடம் வைத்தலும் ஒன்றாகும். அதற்கான அர்த்தத்தை புரிந்துகொள்ள இக்கட்டுரை உதவும் என நம்புகின்றேன்.

இந்து மதம் கலை, வழிபாடு, பண்பாடு என்பவற்றை தன்னகத்தே இணைத்துக்கொண்டுள்ளது. அதனை அம் மதம் ஒருபோதும் பிரித்து நோக்காது. ஆனால் கிறிஸ்தவ மதம் கலை, வழிபாடு, பண்பாடு என்பவற்றை இணைத்துக் காணாது தனித் தனியே பிரித்துச் செயற்படுத்தும். இதனால் வழிபாடு மதம் சார்ந்தது என்றும் கலை, பண்பாடு என்பன மத சார்பற்றதாகவும் கருதப்படும். இதனை நாம் அடிப்படையாக புரிந்துகொள்ள வேண்டும். நிறை குடம் வைக்கப்படும் நோக்கம், அதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் என்ன? என்பதையும் அதற்கான அர்த்தத்தையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். நிறை குடம் வைப்பதன் நோக்கம் என்ன என்பதையும் அதன் அர்த்தத்தையும் முதலில் சுருக்கமாகத் தருகிறேன்.

நிகழ்வுக்கு வருகை தருவோர் மன நிறைவுடன் வரவேற்கப் படுகின்றார்கள் என்பது உருவகப் பொருட்களினால் விளக்கப்படுகின்றது. அதில் நாம் காண்பது ஒரு மேசையில் தலை வாழையிலை விரித்து வைக்கப்பட்டிருக்கும், விரிக்கப்பட்ட இலையின் மேல் நெல் தானியம் பரப்பி அதன் மேல் குடம் வைக்கப்படும். குடத்தின் மேல் ஒரு முடியுள்ள தேங்காய் வைக்கப்படும். குடத்தின் இரு பக்கங்களிலும் குத்து விளக்குகள் ஏற்றப்பட்டிருக்கும். பரப்பப்பட்ட நெல்லின் மேல் வாழைப்பழம், எலுமிச்சம் பழம், வெற்றிலை, வண்ண மலர்கள் என்பன வைக்கப்பட்டிருக்கும். நறுமணம் வீசும் பத்திக் குச்சுக்கள் கொழுத்தி வைக்கப்பட்டிருக்கும். இவை நிறை குடம் வைப்பதற்கு தேவையான பொருட்களாகும்.

வைக்கப்பட்டிருக்கும் குடம் வருகை தருபவர்களை வரவேற்கும் சரீரமாகவும், மேலே முடியுடன் வைக்கப்படும் தேங்காய் தலையாகவும் உருவகிக்கப்படும். அப்படி உருவகிக்கப் படுபவர் வருகை தருபவர்களை ஒளிமயமாக தானிய வளத்துடன் மங்களகரமாக நறுமணம் வீசும் பசுமையுடன் வரவு நல்வரவாகட்டும் என்று வாழ்த்துவதாகும். ஒளிமயமாக என்பதனை ஏற்படுத்த குத்து விளக்கும், நெல் தானிய வளத்தையும்; பசுமையாக என்பதனை வாழையிலை, வெற்றிலை என்பனவும், மங்களகரமாக என்பதனை வாழைப்பழம், எலுமிச்சைப்பழம் என்பனவும், பத்திக் குச்சு, வண்ண மலர்கள் நறும் வாசனை, அழகு என்பவற்றையும் சித்தரிக்கின்றது.

விளக்கு - ஒளி, பச்சை - பசுமை, மஞ்சள் - மங்களம் என்ற பொருளைத் தருகின்றது. எனவே நிறை குடம் என்பது இலக்கியக் கண்ணால் நோக்கப்பட வேண்டியது. இதனை சமய சார்புடையது எனக் கருத முடியாது. ஆனால் இந்த நிறை குடம் பொருட்களுடன் திரட்டப்பட்ட மாட்டுச் சாணம், அறுகம்புல், திருநீறு, குங்குமம் வைக்கப்படும் போது அது சமய சார்புடையதாகின்றது.

பழைய பாரம்பரியங்கள் காக்கப்பட வேண்டும் என்று கருதும் கிறிஸ்தவர்கள் சமய சார்பற்ற முறையில் நிறை குடம் வைக்க விரும்பினால் வைக்கட்டும். நவீன சாதனங்களால் அார்த்தம் பொதிந்த வரவேற்கும் சிந்தனைகள் மலர்வதும் வரவேற்கத் தக்கதாகும். அர்த்தமுள்ள சடங்குகளை அர்த்தத்துடன் நடப்பிக்க நாம் முன் வருவோமாக!

அருட்திரு. V.N. தர்மகுலசிங்கம


## 31 ஆம் நாள் நினைவில் எங்கள் "பப்பா"



அமரர் கந்தையா எட்வேட் சண்முகம்

(முன்னாள் வேதாகம சங்க ஊழியர்)

மண்ணில் 23.06.1921 விண்ணில் 25.12.2012

என்தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன.
யோவான் 14:22

பாசமுள்ள பப்பாவே
பண்புடன் எங்களை எல்லாம்
பலவழிகளில் கல்வி புகட்டி
பார் போற்ற வழிநடத்தினீர்களே
'பப்பா' உங்கள் இடத்தை
பாரினில் யாரும் நிரப்பமுடியாது
நாள்கள் 31 ஆனபோதும்
நாம் என்றும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் என உங்கள்
நினைவுடன்தான்.

இல.119, ஏழாலை மத்தி, ஏழாலை.

குடும்பத்தினர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## Indiana Kentucky-UCC
## வன்னிப் பிராந்திய குழுவினரும் சந்திப்பு

UCC திருச்சபையின் இந்தியானா கென்ரகி மாநாட்டின் பிரதிநிதி களுக்கும் வன்னிப் பிராந்திய குருமார், செயற்குழு உறுப்பினர் களுக்கு மிடையிலான சந்திப்பு ஒன்று வவுனியா தூய.பேதுரு பெண்கள் இல்லத்தில் CACM தலைவர் வண.ஈனோக் பூ.புனிதராஜா தலைமையில் நடை பெற்றது. பிள்ளைகள் சார்பாக Ms.Sophiya Paul Suresh ஆங்கி லத்தில் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

வன்னிப்பிராந்திய செயலாளர் வண. D.S. மதியாபரணம் அவர்கள் திருச்சபையின் ஆன்மீக மற்றும் சமூகப் பணிகள் குறித்தும் எதிர்காலப் பணித்திட்டங்கள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.


பெண்கள் சார்பாக திருமதி. சுதாகரன் சுதர்சினி அவர்கள் யுத்த கால அனுபவங்களை கண்ணீர் மல்க பகிர்ந்து கொண்டார்.

செயற் ழு உறுப்பினரான திரு. க. பிரதாப... குறிப்பிடுகையில் "நான் இல்லத்தில் இருந்து வளர்ந்தவன் என்ற வகையில் எமது திருச்சபை வளர்ச்சியின் உச்சக் கட்டம் என்பது ஆண்கள் பெண்கள் இல்லங்கள் தான். இங்கிருந்து பயனடைந்து சென்றவர்களில் அனேகர் பல்வேறுபட்ட உயர் மட்டங்களை கடமையாற்றி வருகின்றனர்" என குறிப்பிட்டார்.

தூய. பேதுரு ஆலயத்தின் குருவானவர் வண. M.D. போல் சுரேஷ் அவர்கள் வவுனியா பெண்கள் இல்லம் குறித்தும் நீதி மன்றத்தினால் அனுப்பப்படும் தேவையில் உள்ள பிள்ளைகளை எவ்வாறு அனுமதிப்பதென்றும் விளக்கமாக கூறினார்.

இறுதியில் பிள்ளைகளின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து விருந்தினர்கள் பெண்கள் இல்லப் பிள்ளைகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் குருமாருடன் இணைந்து ஐக்கிய இரவுணவில் கலந்து கொண்டனர்.

அண்மையில் இந்தியா விஸ்தார் அமைப்பின் நிறுவுனர் வண. டாக்டர் டேவிட் செல்வராஜ் மற்றும் வண. டாக்டர். தீனதயாளன் ஆகியோரின் உதவியுடன் CACM திருச்சபையின் வருகின்ற 5 ஆண்டுகள் முன்னோக்கு மூலோபாயத் திட்டமிடல் பயிற்சிப்பட்டறை நடைபெற்றபோது. இது 3வது பயிற்சிப்பட்டறை என்பது குறிப்பிடத்தக்கது. 1ம் கட்டம் பங்களூரிலும் 2ம் கட்டம் மட்டக்களப்பிலும் நடைபெற்றது.



## வழிபாடும் வழிபாட்டு முறைமைகளும்

கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை நாம் கடவுளுடன் கொண்டுள்ள உறவேயாகும். இவ்வுறவை நாம் ஜெபம், கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளுதல் போன்றவற்றிற்கூடாக அறிந்து கொள்ளவும் வளர்த்துக் கொள்ளவும் முடியுமெனினும் இவ்விரண்டையும் ஒன்றுசேர அனுபவிக்க வழிபாடு உதவுகிறது. தனியாக, இருவர் மூவராக, குடும்பமாக, குழுவாக, சமூகமாக, திருச்சபையாக வழிபாடானது காலங்காலமாக மக்களையும் கடவுளையும் சந்திக்கச்செய்யும் நிகழ்வாக உள்ளது.

திருச்சபையாக நாம் நடத்திவரும் வழிபாடுகள் குறித்தும் வழிபாட்டு முறைமைகள் பற்றியும் விரிவாக ஆராய்ந்து, விளக்கங்களைப் பெற்று, கருத்துக்களைப் பகிர்ந்து வழிபாட்டை மேலும் அர்த்தமுள்ளதாக்குவதைக் குறித்து இவ்வருடத்தில் தமது திருமறைப் படிப்புக்களையும் கலந்துரையாடல்களையும் நடத்த சீ.ஏ.சீ.எம் கொழும்புத்திருச்சபை உத்தேசித்திருக்கிறது.

இந்நோக்கத்தின் முதற்கட்டமாக கடந்த ஜனவரி 26ஆம் திகதியன்று வழிபாடு என்றால் என்ன? எனும் பொருளில் சிரேஷ்ட அருட்பணியாளர் எஸ். எஸ். ஞானராஜன் அவர்கள் திருமறைப்படிப்பை நடத்தினார். அரைநாள் நிகழ்வாக நடந்த இப்படிப்பில் உண்மையான வழிபாடு என்றால் என்ன- வழிபாட்டின்போது நமது சிந்தனை எவ்வாறு இருத்தல் வேண்டும்- வழிபாடு அனைவருக்கும் உரியது- வழிபாட்டின் முழுமையும் அவசியமானது- வேதாகம அடிப்படையில் வழிபாட்டின் உள்ளடக்கங்கள் ஆகிய விடயங்களை வேதாகம ஆதாரங்களோடும் உதாரணங்களோடும் விளக்கியதுடன் வழிபாடு குறித்துக் கடந்த காலங்களிலும் நிகழ்காலத்திலும் மக்கள் மத்தியில் நிலவிவரும் கருத்துக்கள் எவையெனவும் விளக்குவதாக இப்படிப்பு அமைந்தது.

நிறைவாம்சமாக உரையாற்றிய சபைப்போதகர் அருட்திரு ரீ. தேவநேசன் அடிகளார் தொடர்ந்தும் வழிபாடு பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து உண்மைகளை அறிந்துகொள்ளும் பல நிகழ்வுகளை நடத்தக் கொழும்புத்திருச்சபையின் அதீட்சதர் சங்கத்தினர் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

(பீ.என்.ஜே)

PUBLIC LIBRARY

## திருமண சேவை

அன்பின் தாரகை வாசகர்களே!
இன்று கிறிஸ்தவ குடும்பங்களின் பல பிள்ளைகளுக்கு ஏற்ற காலத்தில் பொருத்தமான துணைகளை தேடிக்கொள்வதில் பல சிரமங்கள் உள்ளன. இதனால் பல பிள்ளைகள் தம் விசுவாச வாழ்வை இழந்துள்ளனர். இதனை உணர்ந்து இப்பத்திரிகை மூலம் ஓர் பொருத்தமான துணையை தேடிக்கொடுக்கும் சேவையை செய்ய முயற்சிக்கின்றோம்.

ஆகவே தேவையில் உள்ளவர்களின் விபரங்களை உங்கள் போதகருக்கூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்.



### மணமகள் தேவை

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட 42 வயதுடைய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஏற்கனவே திருமணமாகி விவாகரத்து பெற்ற மணமகனுக்கு குணசாலியான கிறிஸ்தவப் பெண்ணைத் தேடுகிறார்கள். தொடர்புகொள்ள உதயதாரகை முகவரிக்கு கடிதம் மூலம் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறை+ திருச்சபை+அரசியல்=ஒடுக்கப்பட்டோரின் விடுதலை

(சென்ற இதழ் தொடர்ச்சி )

லூக்கா போதகர் - அக்கராயன்குளம்

திருச்சபையின் அகிம்சை போராட்டத்தைப் பற்றி பேசும் போது வரலாற்றிலே அகிம்சை போராட்டங்களை முன்னெடுத்து வெற்றி கண்டவர்களைக் குறித்து கவனம் செலத்த வேண்டும். இயேசு கிறிஸ்துவே எல்லா அகிம்சை வழி போராட்டங்களுக்கம் முன்னோடியாக இருக்கிறார்.

பேராயர் ஒஸ்கார் ரொமேரோ ஒரு சிறந்த அகிம்சை வழி போராட்ட வீரர். அரசுக்கு எதிராக ஆளும் வர்க்கத்திற்கு எதிராக பண பலமிக்கவர்களுக்கு எதிராக வத்திகானுக்கும் எதிராக போராடியவர். அதே சமயம் அன்றாடம் துடி துடித்து வாழும் ஏழை எளிய எல்சால்வதோர் மக்களுக்கு ஆதரவாகத் தன் பேச்சு மூச்சு ஆவி அனைத்தையும் வழங்கியவர். இவர் பேராயராக பொறுப்பேற்ற போது அக்குய்லேரஸ் என்ற குக்கிராமத்தில் மக்கள் பணியாற்றிய பங்குக்குருவும் இரு பங்கு மக்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இராணுவம் சான் சால்வதார் நகரத்தைச் சூறையாடியதோடு நூற்றுக்கு மேற்பட்ட எளிய மக்களைச் சுட்டுக் கொன்றனர். எனவே ஆளும் வர்க்கத்திற்கு எதிராக ஆஸ்கார் கடும் கண்டனக் குரல் எழுப்பினார். அவரது எதிர்ப்புக் குரலானது எல்சால்வரோரின் மூலை முடுக்கெல்லாம் முழங்கியது. தான் முன்னெடுத்த அகிம்சை வழி போராட்டதைப் பற்றி இவர் இவ்வாறு கூறுகின்றார்.

“நாம் நடத்தும் போராட்டம் நம்மை துன்புறுத்துவோர்க்கு எதிராக ஆயுதங்கள் ஏந்தி நடத்தும் போராட்டமன்று. இது சகோதரத்துவம் நிறைந்த அன்பு பொதிந்த போராட்டமாகும். இந்தப் போராட்டம் ஆயுதம் ஏந்தி நம்மை அழிக்க நினைக்கும் சக்திகளை அடியோடு ஒழிக்கும் போராட்டம்.’

அநீதிகளைத் தட்டி கேட்காத திருச்சபை கடவுளின் திருச்சபையாக இருக்க முடியாது. நியாத்திற்காக சாவது ஒரு ‘திருவருட்சாதனம்’. பசியால் வாடுவோர் மீதும் பள்ளி செல்ல இயலாதோர் மீதும் பள்ளிகளே இல்லாமல் பரிதவிப்போர் மீதும் உரிமைகள் பறிக்கப்பட்டோர் மீதும் திருச்சபை மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். நியாயத்துக்காக உழைக்காத திருச்சபை எதிர் விளைவுகளை விரும்பாத திருச்சபை அதிகாரத்தைப் பயன்படுத்தி முன்னுரிமை தேடிக் கொள்ளும் திருச்சபை நிச்சயமாக இயேசுவின் திருச்சபையாக இருக்க முடியாது போன்ற சிந்தனைகள் அவரது அருளுரையில் எதிரொலித்தன. ஆலயத்தில் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அரசாங்கத்திற்கு இடி போல விழுந்தன. அரசு மனமாற வேண்டும் என் அழைப்பு விடுத்தார்.

மார்ட்டின் லூதர் கிங் அகிம்சை வழியில் போராடிய இன்னுமொரு திருப்பணியாளர். இவர் கறுப்பினத்தைச் சேர்ந்தவர். வெள்ளையர்களுக்கு எதிராக போராடினார். வெள்ளையர்களுடன் தாமும் சமவுரிமையுடன் பேருந்துகளில் பயணிக்க வேண்டும் என முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டங்களுக்கு கிங் தலைமைத்துவம் கொடுத்தார். கிங் தனது உரை ஒன்றில்

“அன்பான நண்பர்களே, சில நேரங்களில் நம் மக்கள் மிகவும் சோர்ந்து போகும் நிலை ஏற்படுகின்றது. நம்மை இந்நாள் வரை மோசமாக நடத்தியவர்களுக்கு முக்கியமான செய்தியைக் கூறவே நாம் இங்கு கூடியுள்ளோம். நாம் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டும் அவமானப்படுத்தப்பட்டும் வருவதைக் கண்டு சோர்வடைந்து விட்டோம் என்பதைக் கூறுவதற்காகவே இங்கு கூடியிருக்கிறோம். அடக்கு முறையின் காட்டுமிராண்டித்தனமான கால்களால் மிதிக்கப்பட்டு மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகிவிட்டோம் என்பதைத் தெரிவிக்கவே இங்கு கூடியுள்ளோம். எதிர்ப்பு தெரிவிப்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. பல ஆண்டுகளாக நாம் வியக்கத்தக்க வழியிலே பொறுமையைக் கடைபிடித்துள்ளோம். ஆனால் அந்த பொறுமையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்காக நாம் இப்பொழுது இங்கே கூடியுள்ளோம். நாம் நமது கோரிக்கையில் உறுதியாக இருந்து அகிம்சை வழியில் போராட வேண்டும். அகிம்சை அன்பு மூலமே நாம் வெள்ளைச் சகோதரர்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.”

381 நாட்கள் தொடர்ந்த இப்போராட்டம் ‘சுதந்திரத்திற்கான நடை’ என அமெரிக்கா முழுவதும் பிரபலமானது. வெள்ளை இனவெறியர்கள் சிலர் கிங் அவர்களின் வீட்டின் மீது வெடிகுண்டை வீசினர். 1956 டிசம்பர் 21ல் அமெரிக்க உச்ச நீதிமன்றம் கறுப்பினத்தவர்கள் பேருந்துகளில் விரும்பிய இருக்கைகளில் அமர்ந்து பயணம் செய்யலாம் என அறிவித்தது. ஓடுக்குமுறையைச் சகித்துக்கொண்டிருப்பது பொருத்தமற்றது என்பதில் தெளிவாக இருந்தார். நீக்ரோக்கள் ஒவ்வொரு வரும் பத்துக்கட்டளைகள் அடங்கிய அட்டையொன்றில் உறுதிமொழி கையெழுத்திட்டனர். அவற்றில் ஒன்று “உடலினாலோ வார்த்தையினாலோ அல்லது இதயத்தினாலோ வன்முறையில் ஈடுபடாமலிருத்தல்.

1961 கோடை காலத்தில் மட்டும் அமெரிக்காவில் 35 மாநிலங்களில் 196 நகரங்களில் 841 மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. நீக்ரோக்களின் போராட்டம் கிறிஸ்து காட்டிய அன்பின் அடிப்படையிலிருக்க வேண்டும் என்பதில் கிங் உறுதியாக இருந்தார். இவருடைய சிந்தனைகளில் அகிம்சையே அடிப்படையாக இருந்தது.

இனவாதத்தை இனவாதத்தால் மேற்கொள்ளாமல் ஒடுக்குமுறையை ஒடுக்குமுறையால் மேற்கொள்ளாமல் ஜனநாயகம் சமத்துவம் போன்றவற்றிற்காக வாழ்ந்தவர் நெல்சன் மண்டேலா. ஐரோப்பிய வெள்ளையர்கள் தென்னாபிரிக்காவை ஆதிக்கம் செய்து செழிப்பான நிலங்களை எடுத்துக் கொண்டனர். வளம் குறைந்த நிலங்களில் கறுப்பர்கள் தங்கி வாழ வேண்டிய நிலையேற்பட்டது. காலப்போக்கில் திட்டமிட்டு திணிக்கப்பட்ட ஒடுக்குமுறையால் கறுப்பர்கள் அடிமைகளாகவும் வேலையாட்களாகவும் வாழ வேண்டிய ஒன்று என்பது மண்டேலாவுக்கு நன்கு விளங்கியது.

விடுதலை பெற வன்முறையிலும் இறங்கினார். ஆனால் பிற்காலத்தில் தென்னாபிரிக்காவின் முதல் தலைவராக வந்த போது மன்னிப்பை முக்கியத்துவப்படுத்தி தனது ஆட்சியை முன்வைத்தார். இறுதியில் அகிம்சை வழியிலே தான் இவரும் வருகின்றார்.

இந்தியாவிலே பெரியளவிலே அகிம்சை போராட்டத்தை நடத்தி வெற்றி கண்டவர் மகாத்மா காந்தி. தென்னாபிரிக்காவில் இருக்கும் போது அங்கு காணப்பட்ட நிற துவேசத்தைக் கண்டு அதற்கு எதிராக போராட தீர்மானித்தார். பலவீனமான ஆயுதமாக கருதப்பட்ட ‘சாத்வீக எதிர்ப்பு’ (passive Resistance) ‘பகைமை உணர்வுடன் காணப்பட்டதால், காந்தி இந்தியரின் எதிர்ப்பு இயக்கத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த பொருத்தமான ஒரு சொல்லைத் தேடினார். இந்தியன் ஒப்பீனியன் மூலம் சதாக்கிரகம் என்ற சொல் கிடைத்தது. காந்தி அவர்கள் அதனை ‘சத்தியாக்கிரகம்’ என மாற்றினார். சத்தியாக்கிரகப் போராட்டம் தென்னாபிரிக்காவில் காந்தியால் மேற்கொள்ளப்பட்டது. இந்தியா வந்து சேர்ந்த காந்தி ஒப்பந்த தொழிலாளி முறை ஒழிப்புக்காக போராடினார். ஆகமபாத்தில் உள்ள தொழிலாளிகள் நீண்ட காலமாக கூலி அதிகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக கிளர்ச்சி செய்து வந்தனர். இவர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க காந்தி உண்ணா நோன்பு இருந்தார். காந்தியின் செயற்பாடுகள் முக்கியமாக ஒத்துழையாமையை அகிம்சை ரீதியில் தெளிவாக உறுதியாக முன் வைத்தது. பல தடவைகள் காந்தி உட்பட பலர் சிறைச்சாலைக்கு செல்ல வேண்டியிருந்தது. உப்பு சத்தியாக்கிரகம் முன்னெடுக்கப்பட்டது. இந்தியருடைய வளங்கள் இந்தியருக்கே என அரசுக்கு உணர்த்தப்பட்டது. வெள்ளையரை வெளியேற்றும் போராட்டங்கள் தொடர்ந்தன. இந்து முஸ்லிம்களின் ஒற்றுமையை காந்தி வலிறுத்தி வந்தார். இவற்றுக்காக பல உண்ணாவிரதங்களை மேற்கொண்டார். அநீதிக்கு ஒத்துழைப்பு மறுப்பு, நீதியற்ற சட்டங்களுக்கு கீழ்ப்படியாமை உண்ணாவிரதம் போன்றவற்றின் மூலம் காந்தி சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டார். அகிம்சையே கடவுளை அடையும் வழி என காந்தி கூறுகின்றார்.

ஆகவே இத்தகைய பின்னணியின் அடிப்படையில் நீதியின் அரசியலை முன்னெடுக்க உதவி செய்ய வேண்டும். திருச்சபை ஒரு போதும் இனவாத அரசியலை தூண்டி விடக்கூடாது. மக்களினங்களிடையே பிளவுகளை ஏற்படுத்தவும் கூடாது. மாறாக அனைத்து தளங்களிலும் கவனிக்கப்படாது, கைவிடப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான அரசியலில் ஈடுபட ஆண்டவர் அழைக்கிறார். லூக்கா4:18-19 வரையான ஆண்டவரின் வார்த்தைகளை நமதாக்கி புதிய மண்ணுலகமும் புதிய மானுடமும் படைத்திட எம்மை அர்ப்பணிப்போமாக.

# சாம்பலும், புழுதியும், நமது பெலவீனங்களும்

கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்காகவும் சிலுவை சுமக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்றால் கடவுள் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். எங்கள் மீது கொண்ட அன்பின் நிமித்தம் நாம் அழிந்து போவது அவரின் விருப்பமல்ல தன்னை மாய்த்து எங்களை மீட்கவும், வேள்வி திருமகனாக சாவையே துணிந்து ஏற்கும் அளவுக்கு எம்மில் அன்பு கூர்ந்தார்.

சாம்பல் புதன் கிழமை தொடங்கி நாற்பது (40) நாட்கள் கிறிஸ்தவர்கள் நோன்பு இருந்து ஜெபிக்கவும், உபாவாசிக்கவும் தொடங்கி கிறிஸ்துவோடு பயணிக்கவும் ஆயத்தப்படுவர்..பழங் கால மதங்களில் சாம்பல் அதிகமாக உபயோகத்தில் இருந்தாலும் எக்காரணத்திற்காக முதன் முதலில் சாம்பலை வழிபாட்டில் பயன்படுத்த ஆரம்பித்தனர் என்று பார்க்கையில் சாம்பலும் புழுதியும் சமநிலையில் தான் காணப்படும். சாம்பலை புழுதியோடு இணைத்து தான் பேசப்பட்டு வருகின்றது.

மனிதனின் பாவத்தையும் பலவீனத்தையும் குறிக்கும் சின்னமாகச் சாம்பல் விளங்குகின்றது. பாவியின் இதயம் புழுதியோடு ஒப்பிட்டுப் பேசப்படுகின்றது. சிலை வழிபாடுகளில் ஈடுபடுகின்றவர்களை வெறும் சாம்பலில் பற்று வைப்பவன் என்றும், அவன் உள்ளமோ வெறும் சாம்பல் தான், அவனது நம்பிக்கை புழுதியிலும், தாழ்வானது என்று ஏசாயா 44:20 சொல்கிறார். இக்காரணத்தினால் பாவத்தின் கூலியும் வெறும் சாம்பலாகத் [illegible] எவ்வாறெனில் [illegible] தாங்கள் சாம்பலாகச் சுட்டெரிக்கப்படுவதை காண்பார். தீயவர்களோ நீதிமான்களின் காலடியில் சாம்பல் போல் மிதிபடுவர். மேலும் தன் அகந்தையை அகற்றி தன் பாவத்தை உணரும்படி தன்னைப் புழுதிக்கும் சாம்பலுக்கும் ஒப்பிட்டுக் கொள்ளல் வேண்டும். பாவியின் மனவருத்தத்திற்குச் சின்னமாக சாம்பல் விளங்கும்.

இவ்வாறு தன்மேல் சாம்பலைத் தூவிக் கொள்ளும் போது மனிதன் மௌனமாக ஊரறியத் தன் பாவத்தை ஏற்றுக் கொள்கின்றார். இதனைத் தான் சாம்பல் புதன் அல்லது விபூதிப் புதன் என்று அழைக்கின்றோம். சாம்பலோடு ஒன்றாகப் போகும் இச்சடப்பொருளின் மூலம் மனிதன் தன் பாவத்தையும் பலவீனத்தையும் ஏற்றுக் கொள்கின்றான். இவ்வாறு கடவுளின் தீர்ப்பையும் தடுத்து நிறுத்தி அவருடைய [illegible] கவருகின்றான். இன்[illegible]ங்கள் வெறுமையை ஏற்றுக் கொண்டுள்ள நாம் கிறிஸ்துவும் எங்களுக்காகவே தம்மைத் தாமே வெறுமையாக்கினார். எங்களுக்காக வெறுமையாக்கப்பட்ட இவர் பாவருக்கும் பாவத்தின் மீதும் சாவின் மீதும் வெற்றிவாகை சூடவும் அழுகிறவர்களை மகிழ்விக்கவும், சாம்பலுக்குப் பதிலாக மணி முடியை சூடவும் (ஏசா 61:3) வேள்வி மகனாகிய கிறிஸ்து எங்களுக்காக பாடுகளை ஏற்றுக் கொள்கின்ற புனிதநாள். இந்நாட்களுக்காக எங்கள் ஆடம்பரங்களை குறைத்து கிறிஸ்து எனக்காகவும், பாடுபடப்போகின்றார், அவர் சிந்தும் குருதித்துளிகளில் எனக்கும் பங்குண்டு என்று நினைத்து விசுவாசத்தோடு ஜெபிக்கவும், வழிபாடுகளில் கலந்து கொள்ளவும், எங்களைத் தயார் பண்ணுவோமாக.

சகோ.நடேசன் சிவகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்க ஐக்கிய கிறிஸ்து சபையின் இந்தியானா கென்ரகி மாநாட்டு பிரதிநிதிகள் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபைக்கு விஜயம் செய்த போது CACM திருச்சபையால் நடாத்தப்படும் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் பார்வையிட்டனர்.

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை யாழ்.பிராந்திய குருமாரையும் நிர்வாகக் குழு உறுப்பினர்களையும் சந்தித்த போது.



கிறிஸ்தவ இறையியல் கல்லூரி குடும்பத்தை சந்தித்த போது அதிபர் அவர்களினால் கல்லூரி செயற்பாடுகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.



தெல்லிப்பளை மிஷன் கல்லறைத் தோட்டத்தையும் மிஷன் இல்லத்தையும் தேவாலயத்தையும் பார்வையிட்டுகின்றனர்.



உடுவில் மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்ததோடு உடுவில் மிஷன் கல்லறைத் தோட்டத்தையும் பர்வையிட்டனர்.



CACM திருச்சபையால் காரைநகர் ஊரிக் கிராமத்தில் நடாத்தப்பட்டுவரும் முன்பள்ளிக்கு விஜயம் மேற்கொண்ட போது.



மருதனார்மடத்தில் உள்ள கேன் (Canne) புற்றுநோயாளர் காப்பகத்திற்கு விஜயம் செய்த போது

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை யாழ். பிராந்திய குருமார் மருத்துவத் திருப்பணி வாரத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் உள்ள சில வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளரை சந்தித்து ஆறுதல் கூறியதுடன் சிறிய பரிசுப் பொருட்களையும் வழங்கி மகிழ்வித்தனர்.



காரைநகர் வைத்திய சாலைக்கு விஜயம் செய்த போது.



தெல்லிப்பளை வைத்திய சாலை



பருத்தித்துறை வைத்திய சாலைக்கு விஜயம் செய்த போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Free for Love

**Reflection by William C. Green**

**Excerpt from Luke 13:31-35**

"How many times I wanted to put my arms around your people but you wouldn't let me."

Roman rule in Jerusalem was abusive. Kings Herod Archelaus and then his brother, Herod Antipas, beautified the city. However, as Jesus said of its religious leadership as well, what was inside was "full of impurity and corruption."

It's hard for both rulers and ruled to know much about love when one has all the power and the other is helpless, at best resigned. Sometimes those with power don't know or care when it's corrupting or abusive. Often those suffering from it don't know a way out. Sometimes what's corrupt is considered normal - as with Lance Armstrong, dominating the world of cycling for years and later maligning all his former friends and other competitors by saying that performance-enhancing drugs were normal, "everyday." Nothing exceptional about him. Corruption and abuse can be experienced innocently and also considered normal. I've known a boy I love whose birth parents had abused him from the day he was born. Anger and hunger were all he knew before he was adopted. He mistook abuse for the way things are supposed to be. It was years before he could understand that love is not a form of neglect.

What abuse do we know? Abuse is not always physical. Sometimes it's verbal. Sometimes it's silent. How is this pushing God away? What or who are the Herods in our own lives? A key to outsmarting them is overcoming their corrupting influence. Help is available to break free. Good pastors and counselors, or smart colleagues, are close at hand. We don't have to stay stuck. We can know love all over again, as if for the first time.

**Prayer**

God, help us break free from all that holds us back and keeps us down. Put your arms around us as we face what we fear, and overcome it. **Amen.**

# IKC visits to Periyaneelavanai



The President and Members of the Indiana-Kentucky Conference visited St-Andrew's Periyaneelavani on 8th of Feb. They were welcomed by the Chairperson of CACM, Rev. Enoch Punithraja, Rev. Rajan Rohan, Parish priest of Periyanilaveni and the stewards of the church.

**House of Care**



They visited the "House of Care", the center for mainstreaming disabilities into development and viewed the activities of the center. Currently 12 beneficiaries are undergoing Occupational therapy care and special livelihood training at this center.

**Kids College**

They also participated as guests in the annual welcome programme for the 19 new entrants for 2013 of St-Andrew's Kids College.

**Girls' Home**



They joined the church members in honoring and awarding Ms. Thushanthini from the girls' home for the excellent results she obtained in the GCE A/L examination. She obtained A's in all three subjects and is ranked 11th in the District.

**Shalom Centre**



They have visited Shalom Centre, Educational and personality Development, Annaikkadiyaveli, Vellaveli, which in one mostly war affected area in Batticaloa district.

They all welcomed by the children and participated as a guest in a culture programme of the children

Finally they joined the participants in sumptuous fellowship lunch and lively discussions.

**Reported by Rev.R.Rohaan**

# Rev. Jude M. Sutharshan from USA A reflection on his experience.



I like to share some of my inspirations with my fellow clergy and lay members in Sri Lanka.

First of all, thank you very much for your prayers and support to go through a study in the US. I always remember that how far you all tried your best to send me for a study in the US. Both of my studies in Chunnakam and Madurai (India) got disturbed by the mass exodus in 1995 and my sister's death and the continuing troubles in church respectively, meantime, my last month, August,2012 in Jaffna before depart for US was too busy and sensitive as my father's state in the hospital, my parish was not clear about the successor, facing the new emerging situation in CACM in the month of August,12 as the temporary administrator in Jaffna and etc, but amidst all, my God did not forsake me, He remembered me, therefore, i am thankful to God. My beloved father from the hospital encouraged me to pursue the studies. I am really privileged to have Theological education at a prestigious seminary like Christian Theological Seminary (CTS), Indianapolis, Indiana.

The CTS experience gives me a wider knowledge on how we must format ourselves to the ministry of God. I try to understand how far the world has gone in theological thinking, Ecumenism, church administration, liturgical reforms, pastoral formations, different ministries and specializations etc. They help us to think theologically by introducing different experiments of theology from all over the world and different times. It is always connected to the pastoral sphere in order to apply this knowledge towards pastoral ministry in the emerging of postmodern situation. We are blessed with wonderful professors and staff in the seminary. They come to class with much preparation, planned schedule for the whole semester, printed materials, PP presentations, introducing primary and secondary reading sources (not like rewriting the notes in our tradition, reading books is very important, you own search and reading are very important here. We have a variety of books in the CTS marvelous library), writing assignments, book reviews, final papers for every course. Proficiency of English is very important to interact with people and to do studies. This is not only for going studies in the US, but also to update ourselves with new thinking and professional way in mission.

Dear Friends, we have to read much. If we are not reading, we miss a lot and we are in a desperate situation. Reading is not only necessary for an education, it is also important to understand everything which is useful to our mission. We must find out proper books and we must develop the reading habit as an everyday practice. We can make our gatherings meaningful with book reviews or thematic lectures. I enjoy and like all of my professors and courses here. I hope they develop me in many ways. I like to pastoral training (SCOFE) program at CTS. It helps us to analyze ourselves first, that how I am functioning and my personality and ministry as pastor, Prophet, priest and proprietor.

My affiliation with UCC congregations in Indiana is a chance for eye opening. First of all, they are Congregationalist. But what we have in the name of congregationalism is not and not at all congregationalism. Here the congregation, their committees plan and implement everything in their congregations. They are very independent. The church committee plays a vital role in the church. It is not about the authority but it is meant for responsibility. It is encouraging to see the whole congregation is somehow involved in the mission. The conference and the local congregations do trainings on various aspects like congregational polity, conflict transformation in parishes, Evangelism, theological orientation, special youth ministries, children's ministries, foreign missions and etc. The congregations interview and hire pastors. Pastors' role is a facilitator to help and exercise the spirituality of the congregation. All of them have their own job descriptions, that does not allow them to contradict, but plan and work together. I am thankful to the Indiana Kentucky Conference of United Church of Christ, its conference minister, Sri Lanka Mission Partnership team members, especially Rev. Thomas Blossom, my mentor for giving me much avenue for interaction with their congregations. Music plays a vital role in their services. The liturgy is really attractive. The pastor does not do everything. The involvement of parishioners is very high. All senior members of the church with youngsters come to the choir, get practice. All are considered equal in the church. A worship with contemporary music and liturgical form is a common in all th congregations and different liturgical experiences are accomodated.

I am blessed to see the behavioral patterns and thinking process of the people here. Many of our people who are living in US also have engaged into such patterns here. We can feel the difference that you do not need to hide or lie anything. They give importance to everyone, whether they are younger or elder or white or black or foreigner. We can talk very frankly with everyone. The people with their responsibility do their work properly. If they are approached, the work will be done. No competitions, no revenges, no parties.

Along with my studies, i do speaking mission in different congregations and groups. I mainly talk about the American links of CACM, Life of our people and ministry of the church.

Challenges i faced were speaking skills and knowledge, lonliness (i do not have a single person to talk in Tamil), preparing my own meals, adopting myself to the new climate etc. Its a total culture shock. But it will take time to understand and come out from its influence.

I do not want to finish this without thanking Dr. Darshan Ambalawanar for his prophetic vision and tireless work for the church. I know there are so many constrains and problems he faces in the church, but he is working wholeheartedly for the betterment of the church. Its not just a mere praise to him, but i have seen his efforts personally. Obtaining a Ph D in US is not a simple matter as some of us think. He has a bright scope and he can earn a lot here, but he sacrfices those and lives with us and emancipate us. When Darshan was in US, he never had any personal buisness or entertainment. He visited many churches, conferences and shared the our story. A lay worker did many things for the church. That is making things possible. We have a Harward PhD holder with dedication amidst us, I feel we didn't use him in appropriate way yet. Now only i understand how much encouragement, we must give to him. Praise Lord for having such people amidst us.

My sincere wishes to all my co clergy and loving church members. God be with you all in this difficult time.

**M. Jude Sutharshan**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் உதயதாரகை பத்திரிகை ஆசிரியரால் யாழ்.வீதி, ஆனைக்கோட்டை சந்தியில் அமைந்துள்ள ரூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 28-02-2013 அன்று வெளியிடப்பட்டது.